நிதி கோரிக்கை பேரவையில் நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 18-க்கு திரு. இல. பலராமன், திரு. கே. எஸ். கோதண்டராமய்யா, திரு. எ. அ. சுப்பாராஜா ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப்பெற்றுக்கொள்ளப்பட்டன.

திரு. ரா. கனகசபை அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவை அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பட்டதாகக் கருதப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "நிதி கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,82,67,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் இருப்பிடத்தில் இல்லாதால் கோரிக்கை எண்—46-க்கு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருந்த அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 46—அரசு வாணிகத்திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 57,01,06,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அலுவல்கள் இன்று இந்த அளவில் முடிவுற்று 20-ம் தேதி காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பிற்பகல் 1-43

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

5 பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

* 164. Notification issued with G.O. Ms. No. 1326, Agriculture, dated the 25th April 1969 in regard to notification of certain areas in North Arcot district under the Tamil Nadu Land Improvement Schemes Act, 1959 [Laid on the Table of the House under Section 44 (3) of the Tamil Nadu Land Improvement Schemes Act, 1959 (Tamil Nadu Act 31 of 1959).]

*** Laid on the Table of the House on 17th March 1970.**